பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 22 வியாழக்கிழமை 05.01.2023 கதிர் 61

## இது ரகசியம் அல்ல!

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டியுள்ள சர்வ கட்சி தலைவர்களின் மரதன் அமர்வு வரும் 10,11,12,13 ஆம் திகதிகளில் நடக்கின்றது.

அதற்கு முன்னோட்டமாக தமிழ் தலைவர்களோடு 2

# தேசிய தேர்தல் ஆணைக்குழுவிற்குள் பிளவு தேர்தலை நடத்துவதில் சிக்கல்கள் எழலாம்




## சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற அரசு முடிவு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான தினம் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் தேசிய தேர்தல் ஆணைக்குழுவிற்குள் ஏற்பட்டுள்ள பிளவு தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ள தினம் அண்மித்துள்ள நிலையில், தேசிய தேர்தல் ஆணைக்குழுவிற்குள் ஏற்பட்டுள்ள உள்ளக பிளவுகளை கருத்திற் கொண்டே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்தப் பிளவிற்கமைய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவாவுடன் ஒரு சிலர் மாத்திரம் உள்ளமையின் காரணமாக, எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் 2



# தீர்வு முயற்சிக்கு ஒத்துழைப்போம்

## சம்பந்தனிடம் மஹிந்த தெரிவிப்பு நேரில் சென்று சுகம் விசாரித்தார்

கொழும்பு,ஜனவரி 05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், மூத்த அரசியல்வாதியுமான இரா. சம்பந்தனை முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ நேற்று நேரில் அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்து, சுகம் விசாரித்தார். அச்சமயம் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முன்னெடுக்கப்படும் தீர்வு முயற்சிகளுக்கு சாதகமாகத் தாங்கள் ஒத்துழைப்பர் என்று சம்பந்தனுக்கு அவர் உறுதியளித்தார். 2

# நாணய நிதிய உதவி சில வாரங்களிலாம்!

## மத்திய வங்கி நம்பிக்கை

சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து இலங்கைக்கு வழங்கப்படவுள்ள நிதி நிவாரணத்தை இன்னும் சில வாரங்களில் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. 2

# தேர்தல் பிரசாரத்தில் ரணில் ஈடுபடாராம்!

## அதற்கு விளக்கமும் கூறுகிறார்

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான எந்தவொரு நடவடிக்கைகளிலும் தான் ஈடுபடப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயம் தொடர்பில் உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. 2

# பொங்கிக் கொண்டாட யாழ் வருகிறார் ரணில்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கு பற்றும் தேசிய பொங்கல் திருவிழா இம்முறை பொங்கல்தினத்தன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜனவரி மாதத்தில் தான் யாழ வரவிருக்கின்றார் என்பதைத் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு ஜனாதிபதி ஏற்கனவே நேரில் தெரிவித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆளுநரின் செயலர் கூட்டும் கூட்டத்தை கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. புறக்கணிக்கும்

யாழ்ப்பாணம்,ஜன.05

வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய ஆளுநரின் செயலாளரினால் விடுக்கப்பட்ட இன்றைய சந்திப்புக்கான அழைப்பை யாழ் மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஈ.பி.டி.பி., கஜேந்திரகுமார் அணி ஆகியவற்றை சேர்ந்த சுமார் 30 உறுப்பினர்கள் சாதகமாக ஏற்று செயல்பட 12

## தேர்தலைத் தடுத்தால் நீதிமன்றை நாடுவோம்

### சுமந்திரன் எச்சரிக்கை



(இ.கலையமுதன்)

உள்ளூராட்சி தேர்தலை தடுப்பதற்கு சில முயற்சிகள் நடக்க கூடும். அவ்வாறு முயற்சிகள் எடுக்கப்படுமிடத்து உடனடியாக 12

## தேவாலயங்களில் இன்று துக்க மணி அடிக்கப்படும்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜன.05

முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் மறைவுக்காக தேவாலயங்கள்,மடங்கள் மற்றும் நிறுவனங்களில் அரைக்கம்பத்தில் திருத்தந்தையின் கொடியேற்றி ஆலயங்களில் துக்கமணியை அடிப்போம் என யாழ் 12

# கூட்டமைப்பு, விக்கி அணி, அரச கைக்கூலிகளுடன் போலித் தமிழ்த் தேசியவாதிகளையும் ஒதுக்குங்கள்!

## சைக்கிளுக்கு வாக்களிக்க கஜேந்திரகுமார் கோரிக்கை



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜன.05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விக்னேஸ்வரன் அணி, ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கூலிகள், போலித் தமிழ் தேசியவாதிகள் ஆகியோரை இனங்கண்டு, ஒதுக்கி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சைக்கிள் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என 12

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று மாலை ஜனாதிபதி தலைமையிலான அரசு குழு உத்தியோகப்பற்றற்ற முறையில் பேசவிருக்கின்றது.

இந்தக் கூட்டத்துக்கு வருகை தருமாறு சுமந்திரனுக்கும் சம்பந்தனுக்கும் நேரத்துடனேயே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கு நேற்று மாலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்திருக்கிறார். எனவே சித்தார்த்தனுக்கும் அழைப்புப் போயிருக்கும். மற்றொரு தமிழ்க் கட்சித் தலைவரான நீதியரசர் விக்னேஸ்வரன் ஏற்கனவே இந்தியா சென்று விட்டமையால் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளார் எனத் தெரிகின்றது.

இது ஒரு புறம் என்றால், மறுபுறத்தில் கூட்டமைப்புப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் சட்ட அணி மூன்று முக்கிய விடயங்களில் தன் கைவரிசையைக் காட்டத் தயாராக இருப்பதாக நம் பிக்கையாக அறிய வருகிறது.

ஒன்று - தற்போது அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலை இடைநிறுத்த முயற்சி ஏதும் எடுக்கப்படுமானால் அதற்கு எதிராக.

அடுத்தது - வடக்கு மாகாண ஆளுநர் தம்பாட்டில் மாகாண நியதிச் சட்டங்களை ஆக்கியமைக்கு எதிரான வழக்கு. நீதிமன்ற விடுமுறை முடிந்து நீதிமன்றங்கள் வரும் திங்களன்று கூடத் தொடங்கியதும் அடுத்த ஓரிரு நாள்களில் அந்த வழக்கு நீதிமன்றத்தில் முதல் தடவையாக எடுத்துக் கொள்ளப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது

மூன்றாவது - யாழ் மாநகர சபையின் மேயராக இருந்த மணிவண்ணன் ராஜினாமா செய்தமையையடுத்து ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், புதிய மேயரைத் தெரிவுசெய்யாமல், தம்மிஷ்டப்படி சபையே கலைந்து விட்டதாக அறிவிப்புக் கொடுக்கும் எண்ணத்தில் சில அதிகாரிகள் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. அத்தகைய அறிவிப்பு ஏதும் வர்த்தமானியில் வெளியானால், அடுத்த கணமே நீதிமன்றத்துக்கு போகவும், அத்தகைய முடிவுக்கு எதிராக தடை உத்தரவு வாங்கவும், சுமந்திரனின் சட்ட அணி தயாராகி வருகிறது என்று தெரிகிறது.

இன்று ஆளுநரின் செயலாளர் விடுத்த அழைப்புக்கான சந்திப்புக்கு செல்ல வேண்டியதில்லை என்று பரிந்துரைக்கும் சட்ட ஆலோசனை, கூட்டமைப்பு மாநகர சபை உறுப்பினர்களுக்கு நேற்று வழங்கப்பட்ட போது, தேவைப்பட்டால் விரைந்து வழக்குப் போட்டு உரிய இடைக்காலத் தடை உத்தரவைப் பெறுவதற்குத் தயார் நிலையில் இருப்பது குறித்தும் உறுதி அளிக்கப்பட்டதாக தெரிகின்றது.

***

கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ஐயாவை நேற்று நேரில் அவரது இல்லத்துக்குத் தேடிப் போய்ச் சந்தித்து, சுகம் விசாரித்திருக்கின்றார் மஹிந்தர். இரண்டு மாதங்களுக்கு முன்நடந்திருக்க வேண்டிய இச்சந்திப்பு, தள்ளித் தள்ளிப் போய், கடைசியாக நேற்றுத்தான் சாத்தியமாகி இருக்கின்றது.

இந்திய அல்லது தமிழக அரசியல்வாதிகளின் சந்திப்பு போல சம்பந்தனை சந்திக்க சென்றபோது தயாராக பொன்னாடை ஒன்றையும் எடுத்துச் சென்றிருக்கிறார்



மஹிந்தர். அவர் சம்பந்தனுக்கு பொன்னாடை போர்த்தியமைதான் நேற்றைய சந்திப்பின் ஹைலைட். அதில் இன்னொரு விடயமும் உள்ளது. என்ன தெரியுமா? மஹிந்தருக்குப் பலர் பொன்னாடை போர்த்தியிருக்கின்றார்கள்.

ஆனால் தாம் முதன் முதலில் பொன்னாடை போர்த்தியது சம்பந்தனுக்கு தான் என்கிறார் மஹிந்த ராஜபக்ஷ.

சம்பந்தனின் மூப்புக்கும், அரசியல் அனுபவத்துக்கும், அவருக்குப் பொன்னாடை போர்த்தியமை தமக்குக் கிட்டிய சிறந்த வாய்ப்பாக மஹிந்தர் கருதுவதில் தப்பில்லைதானே...!

- மின்னல் -

## தேசிய தேர்தல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து உடனுக்குடன் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதாக அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ஒரு தரப்பினர் தெரிவிக்கும் நிலையில், பிறிதொரு தரப்பினர் நிதி நெருக்கடி காரணமாக தேர்தல் நடத்தப்படக் கூடாது எனத் தெரிவிக்கின்றமையே பாரதூரமாக உள்ளக ரீதியில் பிளவுகள் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது.

தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆணைக்குழுவிற்குள் இருவேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றமையால், வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டாலும் தேர்தலை நடத்துவதில் பல்வேறு சிக்கல்கள் எழலாம் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

தேர்தலை நடத்துவதற்கு 12 பில்லியன் ரூபா செலவாகும் என்று கணிப்பிடப்பட்டுள்ள போதிலும், வரவு - செலவு திட்டத்தில் 10 பில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே மேலதிக செலவுகளை முகாமைத்துவம் செய்வது கடினமாகும் என்பது பெருமளவானோரின் நிலைப்பாடாகவுள்ளது.

தேர்தலின் போது தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள், அவர்களுக்கான உணவு மற்றும் எரிபொருளுக்கான கொடுப்பனவுகள் என்பவற்றுக்கு திறைசேரியினால் நிதி வழங்கப்படாவிட்டால் தேர்தல் கடமைகளை நிறைவேற்றுவதில் பாரிய சிக்கல்கள் ஏற்படும் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இந்தச் சிக்கல் தொடர்பில் நிதி அமைச்சுடன் கலந்துரையாடி, நிதி வழங்கப்படும் என்ற உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளாமல் தேர்தலுக்கான தினத்தை அறிவிக்க வேண்டாம் என்று தேர்தல் ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அவருடனுள்ள சிறு தரப்பினர் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை நிதி அமைச்சு வழங்கும் என்று கண் மூடித்தனமாக நம்புகின்றனர் என ஆணைக்குழுவின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

வேட்புமனு தாக்கலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டாலும், உள்ளகப் பிளவுகள் காரணமாக தேர்தல் கடமைகளிலும் இடையூறுகள் ஏற்படலாம் என்பது தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்களின் நிலைப்பாடாகவுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைத்து காரணிகளையும் கவனத்தில் கொண்டு தேர்தல் ஆணைக்குழுவில் ஏற்பட்டுள்ள தற்போதைய பிளவு தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உடனடியாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## தீர்வு முயற்சிக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதில் முதிர்ந்து, தளர்ந்திருக்கும் சம்பந்தனை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரில் சென்று சந்தித்து சுகம் விசாரித்தார். அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இருவரும் பரஸ்பரம் சுக நலன் விசாரித்த பின்னர், பேச்சு தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆரம்பித்திருக்கும் தீர்வு முயற்சி குறித்துத் திரும்பியது.

அந்த முயற்சி வெற்றி பெற முன்னாள் ஜனாதிபதியும் அவரது கட்சியும் முழு ஆதரவு அளிக்க வேண்டும் என்று சம்பந்தன் கோரினார்.

விரைந்து தீர்வு காண ஜனாதிபதி எடுத்திருக்கும் முயற்சியை மஹிந்த ராஜபக்ஷ வரவேற்றார். இது விடயத்தில் தங்கள் ஆதரவு ஜனாதிபதிக்கு உண்டு என்றார் அவர்.

தீர்வு வடிவம் அல்லது யோசனை வந்ததும் அதனை தங்கள் கட்சி மட்டத்தில் ஆலோசித்து, இயன்ற ஒத்துழைப்பை வழங்குவோம் என்றார் மஹிந்த ராஜபக்ஷ.

'மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் முக்கிய தலைவர். நெருக்கடியான சமயத்தில் நாட்டை வழி நடத்தியவர். இப்போதைய நெருக்கடியான சமயத்தையும் நாடு வெற்றிகரமாக தாண்டுவதற்கு தீர்க்கதரிசனத்துடனும் பொறுப்புடனும் அவர் செயல்பட வேண்டும்' - என்று சாரப்பட கோரிக்கையை சம்பந்த முன்வைத்தார் என அறிய வந்தது

சுமார் 40 நிமிட நேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

## நாணய நிதிய உதவி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடைபெற்று வருவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

எனவே, கடந்த வருடம் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட பணியாளர் ஒப்பந்தம் வெற்றியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

## தேர்தல் பிரசாரத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களை நேற்றைய தினம் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் இரண்டு வருடங்களில் நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு செல்வதற்கே தனக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல்களில் ஈடுபட தனக்கு ஆணை வழங்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை மீறி செயற்படுவதற்கு தான் தயார் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானிக்கும் பட்சத்தில், தமது கட்சியின் மரபுக்கு அமைய, செயற்குழுவின் தலைவராக மாத்திரமே தான் தலைமை தாங்க தயார் எனவும் அவர், கட்சியின் தலைவர்களிடம் கூறியுள்ளார்.

அத்தோடு, உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பிலான எந்தவொரு நடவடிக்கைகளிலும் தாம் ஈடுபடப் போவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானிக்குமானால், 40 வீதமான புதுமுக வேட்பாளர்களை களமிறக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.







# 55 ரூபாவுக்கு முட்டையைப் பெற்றுக்கொள்ளலாம் இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கம் முடிவு

சந்தையில் முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்படவும் விலை அதிகரிக்கப்படவும் வர்த்தக அமைச்சரின் நடவடிக்கையே காரணமாகும்.

முட்டை உற்பத்தியைப் பாரிய வியாபாரிகளின் கைகளில் வைத்துக்கொள்வதற்கான சதித்திட்டமே இடம்பெற்று வருகின்றது. அத்துடன் கடைகளில் 55 ரூபாவுக்கு முட்டை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்களின் சங்கத்தின் தலைவர் ஆர்.எம்.ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்துக்கு குறைந்த விலையில் முட்டை விநியோகத்தில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஒரு முட்டைக்கான உற்பத்தி செலவு 48 ரூபாவாக இருக்கும் நிலையில் வர்த்தக அமைச்சர் முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையாக 38 ரூபா எனத் தெரிவித்து வர்த்தமானி அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

இதற்கு எதிராக நாங்கள் நீதிமன்றம் சென்றிருந்தோம். அமைச்சரின் வர்த்தமானி அறிவிப்பு காரணமாக முட்டை உற்பத்தி செய்துவந்த சிறிய உற்பத்தியாளர்கள் இந்தத் தொழிலைக் கைவிட ஆரம்பித்தனர்.

அதன் காரணமாகவே சந்தையில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. நாட்டில் 11 விவசாய மத்திய நிலையங்கள் இருந்த போதும் அமைச்சரின் வர்த்தமானி அறிவிப்பை அடுத்து அது தற்போது 6 ஆகக் குறைந்துள்ளது.

அதனால் நாட்டில் பாரியளவில் முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என காண்பிப்பதற்கு அமைச்சரே திட்டமிட்டு நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதனைக் கட்டுப்படுத்தவே நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். முட்டை விலையை 50 ரூபாவுக்கு குறைய விற்பனை செய்ய நுகர்வோர் அதிகாரசபையுடன் நாங்கள் கலந்துரையாடியிருந்தோம்.

ஆனால் இடைத்தரகர்களாகச் செயற்படும் கறுப்புக்கடை வியாபாரிகள் வியாபாரிகளிடமிருந்து குறைந்த விலைக்கு முட்டையைப் பெற்றுக்கொண்டு 70, 80 ரூபா வரை விற்பனை செய்துவந்தனர்.

இதனைக் கட்டுப்படுத்தவே பிரதான நகரங்களில் நாங்கள் லொறிகளில் 55 ரூபாவுக்கு முட்டை விற்பனை செய்ய ஆரம்பித்தோம். ஆனால் கடை வியாபாரிகளிடமிருந்து எங்களுக்கு பல முறைப்பாடுகள் வந்ததால், கடைகளுக்கே இதனை விநியோகிக்கத் தீர்மானிதோம்.

அதன் பிரகாரம் நாட்டில் இருக்கும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு 53 ரூபாவுக்கு முட்டை விநியோகிக்க நடவடிக்கை எடுத்து, தற்போது விநியோகித்து வருகின்றோம். கடை உரிமையாளர்கள் அதனை 55 ரூபாவுக்கு விற்பனை செய்யவேண்டும் எனத் தெரிவித்திருக்கின்றோம்.

அல்லது வியாபாரிகள் வடமேல் மாகாணத்துக்கு வந்து முட்டை பெற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்களுக்கு 50 ரூபாவுக்கு வழங்குவோம். அவர்கள் 55 ரூபாவுக்கு விற்பனை செய்யலாம். அடுத்த மாதமாகும்போது 50 ரூபாவுக்கு குறைவாக முட்டையை நுகர்வோருக்கு வழங்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்து முட்டை இறக்குமதி செய்ய தற்போது தீர்மானித்திருக்கின்றது. இது வர்த்தக



அமைச்சரின் நீண்டகால எதிர்பார்ப்பாகவே இருந்தது. அதற்காகவே சந்தையில் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலை அதிகரிப்பு ஏற்பட நடவடிக்கை எடுத்திருந்தார்.

அரிசி விலையை தீர்மானிக்கும் அதிகாரத்தை பாரிய நெல் ஆலை உரிமையாளர்கள் தங்களின் கைகளில் எடுத்திருப்பதுபோல் எதிர்காலத்தில் முட்டை உற்பத்தியையும் பாரிய விவசாயிகள் தங்களின் கைகளில் வைத்துக்கொள்ளவே முயற்சிக்கின்றனர். அமைச்சருக்கு நெருக்கமான ஒருசிலரே இதில் ஈடுபட்டு வருகின்றனர். அமைச்சரும் அதற்கு உடந்தையாக இருக்கின்றார் என்றார்.

# தினேஷ் ஷாப்டர் மரணம் தொடர்பில் 140 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு!

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் இதுவரை 140 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் மனித கொலைகள் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

தினேஷ் ஷாப்டர் மீட்கப்பட்ட இடத்தில் காணப்பட்ட இரத்த மாதிரிகள் உள்ளிட்ட ஆதாரங்களை மரபணு பரிசோதனைக்காக அரச இராசயன பகுப்பாய்வாளருக்கு அனுப்ப கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இதற்கமைய, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கைக்கு இணங்க



தினேஷ் ஷாப்டரின் இரத்த மாதிரி, நகங்கள் உள்ளிட்ட உடற்கூறுகள் மற்றும் சம்பவ இடத்தில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்கள் தொடர்பில் மரபணு பரிசோதனை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

# மின் கட்டணத்தை உயர்த்தும் திட்டத்தை குப்பை தொட்டியில் போடுமாறு கோரிக்கை!



சட்டத்துக்கு முரணாக அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட மின்சார கட்டணத்தை உயர்த்தும் பிரேரணையை குப்பைத் தொட்டியில் வீசுமாறு மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்தோடு தற்போதுள்ள அமைச்சரை நீக்கிவிட்டு அனைவருக்கும் வேலை செய்யக்கூடிய மின்சாரத்துறை அமைச்சரை நியமிக்குமாறும் அச்சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரத்ன கேட்டுக்கொண்டுள்ளார். அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட மின் கட்டண உயர்வு யோசனை, பலரது ஆட்சேபனை காரணமாக ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் அதனை மீண்டும் அமுல்படுத்த முயற்சி மேற்கொண்டால் போராட்டங்கள் தொடரும் என்றும் எச்சரித்துள்ளார்.

# டொலர்களைக் கொண்டு வர நான் நடவடிக்கை எடுப்பேன்!

## டயானா கமகே உத்தரவாதம்

நாட்டுக்கு டொலர்களைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை இந்த வருடத்தில் மேற்கொள்ள உள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

சிலர் தன்மீது விமர்சனங்களை முன் வைத்தாலும் மக்களுக்காக தொடர்ந்தும் சேவைசெய்வேன் என்றும் டயனா கமகே தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு



கூறியுள்ளார்.

# பிரவசி பாரதீய சம்மான் விருதுக்குத் தெரிவான ஒரேயோர் இலங்கையர் குமார் நடேசன் ஆவார்!



சமூக சேவையாளரும் ஊடகத்துறை சார் பிரதிநிதியும் வீரகேசரியை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்டின் நிர்வாக இயக்குநருமான குமார் நடேசனுக்கு இந்தியாவின் அதி உயர் விருதான பிரவாசி பாரதீய சம்மான் விருது வழங்கப்படவுள்ளது.

பிரவாசி பாரதீய சம்மான் விருது என்பது வெளிநாட்டுவாழ் இந்தியர்களுக்கு வழங்கப்படும் உயரிய கௌரவமாகும். இந்த விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுவாழ் இந்தியர்கள் தினத்தின் அங்கமாக மத்தியப் பிரதேசத்திலுள்ள இந்தூரில் இடம்பெறவுள்ளது.

17 ஆவது தடவையாக வழங்கப்படும் இந்த விருதுகள் வெளிநாடுகளில் வாழும் இந்திய வம்சாவளி தனிநபர்கள், இந்தியாவில் வசிக்காத இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளித் தனிநபர்கள் ஆகியோரால் ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அவர்கள் மேற்கொண்ட சிறந்த சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் இந்திய ஜனாதிபதியால் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான பாரதீய சம்மான் விருதுகள், அந்த விருதுகள் தொடர்பான நடுவர்கள் சபையில் முன்வைக்கப்பட்ட விருது பெறுபவர்கள் பட்டியலைப் பின்பற்றி வழங்கப்படுகின்றன.

இந்தியாவின் உப ஜனாதிபதியை தலைவராகவும் வெளிவிவகார அமைச்சரை உப தலைவராகவும் தமது வாழ்நாளில் பல்வேறு துறைகளில் தடம் பதித்த ஏனைய கீர்த்திபெற்ற உறுப்பினர்களையும் கொண்ட மேற்படி விருதுகளுக்கான நடுவர் சபையால் இந்த ஆண்டுக்கான பிரவாசி பாரதீய சம்மான் விருதுகளுக்கான நியமனங்கள் பரிசீலிக்கப்பட்டு விருது பெறுவோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இம்முறை உலகளாவிய ரீதியில் 27 பேர் இந்த விருதுக்குத் தெரிவாகியுள்ளனர். இதில் இலங்கையிலிருந்து சிவகுமார் நடேசன் (குமார் நடேசன்) இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

குமார் நடேசன் பிரிட்டிஷ் பேரரசின் ஆணையைப் பெற்ற ஆர்.ஏ. நடேசனின் புதல்வராவார்.

கொழும்பில் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை கொழும்பு சென். தோமஸ் கல்லூரியிலும் உயர்கல்வியை சென்னை லோயலா கல்லூரியிலும் சென்னை பல்கலைக்கழகத்திலும் பயின்றார். அத்துடன் தொழில்நிலை பட்டப்படிப்பாகிய பரிஸ்டர் கற்கையை லண்டனில் கற்றார். அதனைத் தொடர்ந்து 15 ஆண்டுகள் இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகக் கடமையாற்றினார்.

குமார் நடேசன் கடந்த 22 ஆண்டு காலமாக வீரகேசரி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக கடமையாற்றிவருகின்றார். அத்துடன் இந்திய வம்சாவளி மக்களின் உலகளாவிய அமைப்பின் (கோபியோ–இலங்கைக் கிளை) தலைவராக செயற்படுவதுடன் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவராகக் கடந்த 15 வருடகாலம் பணியாற்றி வருகின்றார்.

இலங்கை, இந்திய நல்லுறவு சங்கத்தின் தலைவராகவும் அவர் பணியாற்றியிருந்தார். றோட்டரி கழகத்தின் கொழும்புக் கிளையின் அங்கத்தவராகத் திகழும் இவரது சேவையைப் பாராட்டி சர்வதேச றோட்டரி கழகம் 'சுயவேலைக்கு மேல் சேவை' என்ற பட்டமளித்து கௌரவித்திருந்தது.

போதைப்பொருள் துஷ்பிரயோகத்துக்கு எதிரான தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பின் முன்னாள் தலைவராகவும் இவர் பதவி வகித்துள்ளார்.

தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியம் தன்னார்வ தொண்டு குழுவின் முன்னாள் உறுப்பினராகவும் இவர் திகழ்ந்துள்ளார்.

இவர் சின்மயா மிஷன் நிர்வாக சபை உறுப்பினராக பணியாற்றியிருந்தார். இவ்வாறு பல்வேறு அமைப்புக்களிலும் அங்கத்துவம் வகித்து மக்கள் சேவையாற்றிவரும் குமார் நடேசனுக்கு இந்த விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணிலின் புதிய விளக்கம்

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் தடுப்பதற்கு இயன்றவரை எல்லாம் முயற்சிக்கின்றது ரணிலின் அரசுத் தலைமை.

அவை எல்லாவற்றையும் மீறி, சட்டக் கட்டாயத்தினால் தேர்தலை நடத்தியேயாக வேண்டியிருந்தால், தேர்தலின் முடிவுகளால் தமது அரசியல் எதிர்காலத்துக்கு வரக்கூடிய பின்னடைவுகளைச் சமாளிப்பதற்காக அவர் இப்போதே – நேரத்துடனேயே – அணை கட்டுகின்றார் என்றே தோன்றுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகத் தேர்தலில் சம்பந்தப்பட மாட்டேன், பிரசாரத்தில் இறங்க மாட்டேன் என்றெல்லாம் அவர் இப்போது கயிறு விடுகின்றமை, நேரக் கூடிய விபரீதமான விளைவுகளை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்பது வெளிப்படையானது.

தமது அரசியல் தத்துவங்களின் மூலம் மக்களின் காதுகளில் பூச்சுற்ற எண்ணுகிறார் அவர்.

இன்றைய நிலையில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடக்குமானால் வெற்றிவாகை சூடக்கூடிய முன்னணி வேட்பாளர் தாமேதான் என்பது ரணிலுக்கு தெரியும்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலை இப்போது நடத்த முடியாது. அதற்கு அவர் குறைந்தது இன்னும் ஓராண்டு காத்திருக்க வேண்டும் என்பதும் தெரிந்த விடயம்தான்.

ஆனால் அதற்கு இடையில் ஓர் உள்ளூராட்சித் தேர்தலையோ அல்லது பொது தேர்தலையோ நடத்தினால் அந்த வெற்றியில் எதிரணி – குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி – விஸ்வரூபம் எடுத்து மேலெழுந்து விடும்.

அத்தகைய நிலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரை, அதன் பின்னரான ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிப்பது ஜனாதிபதி ரணிலுக்கு கஷ்டமாக இருக்கும். இந்த யதார்த்தம் அவருக்குப் புரிகிறது.

அதனால்தான், உள்ளூராட்சி தேர்தலுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை, அதில் யார் வென்றாலும் நான் பொறுப்பும் அல்லன் என்ற மாதிரிக் காட்டுவதற்கு நேரத்துடனேயே தயாராகின்றார் ரணில்.

இரண்டு ஆண்டுகளில் நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுக்கும் ஆணைதான் தமக்கு இப்போது வழங்கப்பட்டுள்ளது, அதனால் வேறு விடயங்களில்தான் தலை வைக்க மாட்டார் என்ற விளக்கம் – வியாக்கியானம் – வேறு தருகின்றார் அவர்.

அரசியல் கட்சி ஒன்றின் தலைவராக 28 ஆண்டுகள் தொடர்ந்து இருக்கும் அவருக்கு, அரசியல் கட்சித் தலைவனுக்குரிய பிரதான ஆணை தேர்தலுக்குக் கட்சிக்குத் தலைமை வகித்து வழிநடத்துவதுதான் என்பது புரியாமல் போனது அல்லது புரியாததமை போன்று நடிப்பது ஏளனத்துக்குரியது.

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விரைவில் அமைப்பு என்கிறார் விஜேதாஸ!



இனங்களுக்கிடையில் சிதைவடைந்திருக்கும் நல்லிணக்கத்தை மீளக் கட்டியெழுப்ப எடுக்கும் நடவடிக்கை மக்களை ஏமாற்றுவதற்கான நடவடிக்கை அல்ல. மாறாக உளப்பூர்வமாகவே மேற்கொள்வதுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை அமைக்கவும் நடவடிக்கை எடுப்பேன் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்காத மற்றும் நீதியை நிலைநாட்டுவதில் தாமதம் ஏற்படும் நாடு என எமது நாட்டுக்கு குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நிலை இருக்கும்போது முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கு அது தடையாக இருக்கின்றது. அதனால் இந்த குற்றச்சாட்டுக்களில் இருந்து மீள்வதற்காக நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி உட்பட பல நிலைமைகள் காரணமாக நீதிமன்றங்களில் 11 லட்சம் வழக்குகள் குவிந்துள்ளதுடன் 26ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றமை பாரிய நிலைமையாகும்.

மேலும் கடந்த காலங்களில் தலைதூக்கி இருந்த பொருளாதாரப் பிரச்சினை காரணமாக அராஜக நிலையில் இருந்த நாட்டைப் பொறுப்பெடுப்பதற்கு யாரும் முன்வராத நிலைமையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஓரளவு ஆறுதலான சூழல் ஏற்பட்டு, நாடு ஸ்திர நிலைக்கு மீண்டு வந்துகொண்டிருக்கின்றது.

அத்துடன் நீதி கட்டமைப்பைப் புதுப்பிப்பதற்காக 22 புதிய சட்ட மறுசீரமைப்புகளுக்கு கடந்த 6 மாதங்களுக்குள் அனுமதித்துக் கொண்டுள்ளோம். சட்டங்களை இயற்றுவது போல் அதனை செயற்படுத்துவதற்கும் மேற்படி நிறுவனங்கள் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்ந்து பார்த்து சட்டக் கட்டமைப்பை மாற்றியமைப்பதற்காக ஊழல் எதிர்ப்பு சட்டத்தை விரைவாக அனுமதித்துக்கொள்ள இருக்கின்றோம்.

அத்துடன் இனங்களுக்கிடையில் சிதைவடைந்துள்ள நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் பாரிய பொறுப்பு நீதி அமைச்சுக்கு சாட்டப்பட்டிருக்கின்றது. இன ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது மக்களை ஏமாற்றுவதற்கு அல்ல. மாறாக உளப்பூர்வமாகவே மேற்கொள்வதுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம் மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். – என்றார்.

# மாற்றத்துக்காக போராடியவர்களே தேர்தல்களுக்குத் தயாராகுங்கள்!

## சாணக்கியன் அழைப்பு



மாற்றத்திற்காக போராடியவர்கள் அனைவரும் தேர்தலுக்கு தயாராக வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான தேசிய எல்லை நிர்ணய குழுவை நேற்று(புதன்கிழமை) சந்தித்து கலந்துரையாடலில் சாணக்கியன் ஈடுபட்டார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இவ்வாறு பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர் –

மாற்றத்தைக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு தற்போது ஜனநாயக நீதியாக ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இவ்வாறு அவர்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்பை அவர்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். எனவே அவர்கள் அனைவரும் ஆர்வமாக இந்தத் தேர்தலுக்கு தயாராக வேண்டும்.

அரசாங்கத்தில் இருக்கும் ஒரு சிலர் நிதி இல்லை என சொல்லும் நொண்டிச் சாட்டுகள் தொடர்பில் கரிசனை செலுத்தாமல், அனைவரும் தேர்தலுக்குத் தயாராக



வேண்டும். என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# அதிவேக நெடுஞ்சாலை பஸ் கட்டணம் குறைப்பு!

கொழும்பு, ஜன.4

அதிவேக நெடுஞ்சாலை பஸ் கட்டணம் நேற்று (புதன்கிழமை) நள்ளிரவு முதல் 10 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளது என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.


அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

பஸ் நடத்துநர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் பஸ் கட்டணத்தில் திருத்தம் செய்ய தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்.



தை(05.01.2023): குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் 96 ஆவது ஜனன தினம்.

யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் அருட்தீட்சை பெற்ற பிரதான துறவுச் சீடர்களுள் ஒருவரே சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள். பிறப்பால் அமெரிக்கரான இவர் 1927ஆம் ஆண்டு தை மாதம் 5ஆம் திகதி கலிபோர்னியாவில் பிறந்தார். இளம் வயதிலேயே ஆன்மீக தாகம் கொண்ட இவர் கீழைத்தேசம் நோக்கி வந்தார். அக்காலத்தில் அளவெட்டியில் வாழ்ந்த கந்தையா செட்டியார் என்ற சிவயோக சுவாமிகளின் அடியவர் 1949ஆம் ஆண்டு வைகாசி பூரணை தினத்தன்று அந்த இளைஞனை கொழும்புத்துறையில் உள்ள சிவயோக சுவாமிகளின் ஆச்சிரமத்திற்கு அழைத்து வந்தார். அவரின் வருகையை எதிர்பார்த்திருந்த சிவயோக சுவாமிகள் அவருக்கு சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாம தீட்சை அளித்தார். சிவயோக சுவாமிகள் குருதேவருக்கு பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்து அவரின் வாழ்வின் பணிகள் குறித்து அறிவுரைகளையும் வழங்கினார். சிவயோக சுவாமிகள் குருதேவரின் முதுகிலே பலமாக ஓங்கி அடித்து "இந்த அடி அமெரிக்காவிலே கேட்கும்! இனி உலகெங்கும் சென்று சிங்கம் போல் கர்ச்சிப்பாய். நீ பல ஆலயங்கள் அமைத்து பலருக்கு உணவளிப்பாய்" என்று ஆசிவழங்கினார். இந்த அடி குருதேவரை நாதர் சித்தர் மரபில் சேர்க்கும் தீட்சையாக அமைந்தது. அப்போது குருதேவருக்கு வயதோ இருபத்தியிரண்டு. சிவயோக சுவாமிகளுக்கோ எழுபத்தியேழு.

சுப்பிரமுனிய சுவாமிகள் இலங்கையில் இருந்த காலத்தில் சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் அளவெட்டியில் சுப்பிரமுனிய ஆச்சிரமத்தை நிறுவினார். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றி வரும் சைவசித்தாந்த தர்மசபை இங்குதான் ஆரம்பமாகியது. சிவயோக சுவாமிகளின் ஆணைப்படி குருதேவர் அமெரிக்காவுக்கு திரும்பி வந்து ஏழு ஆண்டுகள் தாம் செய்ய வேண்டிய பணிகளுக்கு தன்னை ஆயத்தமாக்கும் சாதனைகளில் ஈடுபட்டார். தினசரி சாதனையாலும் ஆழ்ந்த தியானத்தாலும் ஞானதிருஷ்டி, ஞானதரிசனம் ஆகிய அக ஆற்றல்கள் குருதேவருக்கு வெளிப்பட்டன. 1957 ஆம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் சுப்பிரமுனிய சுவாமிகள் கலிபோர்னியாவில் இமாலய கலாபீடத்தை நிறுவி அமெரிக்காவின் முதலாவது இந்துக் கோயிலையும் ஸ்தாபித்தார். கீழைத்தேசத்துக்கும் மேலைத்தேசத்துக்கும் இடையில் மையமாக விளங்கும் ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை என்னும் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் 1970 ஆம் ஆண்டு 459 ஏக்கர் நிலப்பரப்பில் குருதேவர் குவை சைவ ஆதீனத்தை நிறுவினார். இங்கு ஆறடி உயரமான சிவநடராஜரை மூலமூர்த்தியாகக் கொண்ட கோயிலை ஸ்தாபித்தார். இதுவே மேலைத் தேசத்தில் அமைந்த முதலாவது சிவன் கோயிலாகும். 16 தொன் எடையுள்ள பெரிய நந்தியை உடைய இக்கோயிலின் எட்டுக் காலப் பூசைகளையும் ஆதீனத்துத் துறவிகள் செய்து வருகின்றனர். குரு தேவருக்கு 1975 ஆம் ஆண்டு மாசி மாதம் சிவபெருமான் ஓர் அகக்காட்சி அருளினார். இந்த அகக்காட்சியின்படி புனித வைலுவ நதிக்கரையில் குருதேவர் ஒரு சுயம்புலிங்கத்தைக் கண்டார். இச்சுயம்புலிங்கத்தை மையமாகக் கொண்டே சன் மார்க்க இறைவன் கோயில் உருவாகி வருகின்றது. இறைவன் கோயிலில் பிரதிஷ்டை செய்யவென ஒரு ஸ்படிகலிங்கம் குருதேவருக்கு 1987 ஆம் ஆண்டு ஆவணி மாதம் கிடைக் கப் பெற்றது. இது ஆறு கோணங்களையுடைய 700 இறாத்தல் எடையும் 39 அங்குல உயரமும் கொண்ட அற்புதமான உலகின் மிகப் பெரிய ஸ்படிக லிங்கமாகும். இறைவன் கோயில் முற்றிலும் கருங்கற்களினால் ஆகம விதிப்படி அமைந்த கோயிலாக பல தலைமுறைகளுக்கு நிலைத்து நிற்கக் கூடிய வகையில் உருவாகி வருகின்றது.

1979 ஆம் ஆண்டு குருதேவர் Hinduism Today என்னும் சஞ்சிகையை



தை(05.01.2023): குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் ஹவாய் சைவ ஆதீனத்தில் தான் பூசித்த சிவலிங்கத்தினை கோப்பாய்க்கு கொண்டு வந்து தனது கரங்களினால் பிரதிஷ்டை செய்து 40 ஆண்டுகள் நிறைவு.

ஆரம்பித்தார். இந்தச் சஞ்சிகை உலகெங்கும் வாழும் இந்துக்களின் குரலாக சர்வதேச ரீதியில் ஒலிக்கின்றது. இந்து சமயம் பற்றிய பல நூல்களையும் குருதேவர் எழுதியுள்ளார். இன்று இவை பல மொழிகளில் எமக்கு கிடைக்கின்றது. இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் குருதேவரின் துறவிகள் அதிநவீன கொம்பியூட்டர்களின் துணையுடன் பல நூல்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டு வருகின்றனர். அமெரிக்காவிலும், மேலைத்தேசங்களிலும் பல இந்துக் கோயில்கள் உருவாக குருதேவர் மூல காரணமாக இருந்துள்ளார். உலகெங்கும் கோயில்களைக் கட்டி வரும் இந்து சமூகத் தினருக்கு ஆலோசனைகளை வழங்கியும், அவர்களின் கோயில்களுக்கு மூர்த்திகளை வழங்கியும், இடையிடையே இந்தக் கோயில்களுக்கு நேரில் சென்றும் குருதேவர் அவர்களை வழிநடத்தி வந்தார்.

1982 ஆம் ஆண்டு சுப்பிரமுனிய சுவாமிகள் கோப்பாயில் ஸ்ரீசுப்பிரமுனிய கோட்டத்தை நிறுவினார். 1983 இல் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின் சுவாமிகள் 'இலங்கைத் தமிழர் அகதி நிவாரண நிதி' என ஒரு நிதியத்தை உருவாக்கி அதன்மூலம் ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கியுள்ளார். 'இந்து கலாசார அறக்கட்டளை' என்னும் ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கி அதன் மூலம் சிறுவர், முதியோர் இல்லங்கள், சமய ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கு உதவி வந்துள்ளார். 1986 இல் புதுடில்லியில் கூடிய உலக சமய பாராளுமன்றம் குருதேவரின் உலகளாவிய சமயப்பணி யைப் பாராட்டி அவருக்கு 'ஜகதாச்சாரியர்' என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் உயர்திரு ஊத்தான் அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் வழங்கப்படும் சமாதானப் பரிசு 2000 இல் சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு வழங் கப்பட்டது. இத்தருணம் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மகாநாட்டிலும் குருதேவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

குருதேவர் 12.11.2001 திங்கட்கிழமை நள்ளிரவு 11-54 மணிக்கு சித்திரை நட்சத்திரத்தில் ஹவாயில் உள்ள தனது சைவ ஆதீனத்தில் துறவிகள் சூழ்ந்திருக்க மகாசமாதி அடைந்தார். குருதேவரின் திருமேனி தகனம் செய்யப்பட்டு அஸ்தி ஆதீனத்தில் உள்ள சிவநடராஜரின் சன்னிதியின் கீழே ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த குகையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மகாசமாதியடையும்போது தனது அடியவர்களிடம் குருதேவர் தான் இந்த உடலை விட்டு நீங்கினாலும் தினமும் இருபத்து நான்கு மணிநேரமும் அகவுலகிலிருந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பேன் என்று கூறினார். குருதேவர் ஆரம்பித்த சிவப்பணிகளை ஆதீனத்துத் துறவிகள், தற்போதைய ஆதீன குருமுதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் தலைமையில் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

## ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்

கோப்பாய் தெற்கில் 1962ஆம் ஆண்டில் பிறந்தவர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள். சிறுவயதிலேயே சமய ஆன்மீக விடயங்களில் நாட்டம் உடையவராக வாழ்ந்த அவர் தனது பதினேழாவது வயதில் சிறுவர்களை இணைத்து சைவச் சிறுவர் கழகம் எனும் அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் சமய, சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வந்தார். 1982 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து வருகைதந்த, யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் சீடரும் அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன ஸ்தாபகருமாகிய குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சைவச் சிறுவர்களின் அழைப்பின் பேரில் கோப்பாய் கிராமத்துக்கு முதன்முதலாக வருகை தந்தார். தொண்டுநாதன் சுவாமி



தை(05.01.2023): குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சிதம்பரம் நடராஜர் சந்நிதியில் வைத்து ரிஷி தொண்டு நாத சுவாமிகளுக்கு தீட்சை வழங்கி 36 ஆண்டுகள் நிறைவு.

களின் வேண்டுகோளுக்கிணங்க சைவச் சிறுவர் கழகம் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் என குருதேவரால் பெயரிடப்பட்டது. அடுத்த வருடம் குருதேவர் ஹவாயில் தான் பூசித்த சிவலிங்கத்தினை கோப்பாய் கிராமத்தில் பிரதிஷ்டை செய்தார்.

1987 ஆம் ஆண்டு குருதேவரின் 60ஆவது ஜெயந்தி தினத்தன்று சிதம்பரம் நடராஜப் பெருமான் முன்னிலையில் தொண்டுநாதன் சுவாமிகளுக்கு குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் தீட்சை வழங்கினார். குருதேவர் இவரை இரண்டு ஆண்டுகள் மொறிசியஸ் நாட்டிலுள்ள தமது ஆச்சிரமத்தில் தொண்டாற்றுவதற்கு அனுப்பி வைத்தார். 1989 ஆம் ஆண்டு தொண்டுநாதன் சுவாமிகளை குருதேவர் ஹவாய் சைவ ஆதீனத்துக்கு அழைத்தார். அங்கு சென்ற இவர் குருதேவரின் சீடர்களில் ஒருவராக பன்னிரண்டு ஆண்டுகள் குருதேவரின் திருவடியின்கீழ் வாழ்ந்து வந்தார்.

தொண்டுநாதன் சுவாமிகள் குருதேவருடன் பல நாடுகளுக்குச் சென்று குருதேவரின் உரைகளை தமிழில் மொழிபெயர்த்து வந்தார். பல சர்வதேச மாநாடுகளில் குருதேவருடன் கலந்து கொண்டதுடன் 2000ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டில் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் உரையாற்றிய போது குருதேவருடன் தொண்டுநாதன் சுவாமிகளும் கலந்து கொண்டமை சிறப் புக்குரியது.

ஹவாய் சைவ ஆதீனத்தில்; வாழ்ந்து வந்த தொண்டுநாதன் சுவாமிகள், குருதேவரின் மகாசமாதியின் பின்னர் அவரின் சக துறவிகளின் ஆசியுடன் மீண்டும் இலங்கைக்கு வந்தார். 2002ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலும் அமெரிக்காவிலும் தனது ஆன்மீக சமய சமூகப் பணிகளை தொடர்ந்து வருகிறார்.

இவர் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இளைய தலைமுறையினருக்கு சைவசமய பாடசாலை மற்றும் ஆன்மீக கருத்தரங்குகளை நடத்தி பெரும் சேவையாற்றி வருகிறார். அத்தோடு அமெரிக்காவில் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்வது, முதியோர் இல்லங்களுக்குச் சென்று அவர்களுக்கு ஆறுதல் அளிப்பது போன்ற மனித நேயப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறார்.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும், மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டுக்கான உதவிகளையும் வழங்கி வரும் சுவாமிகள் பல இடங்களில் குடிநீர் வசதிகள் இன்றி அவலப்படும் குடும்பங்களுக்கு கிணறுகளையும், வன்னிப் பிரதேசங்களில் மாணவர்களின் சமய அறிவுக்காக அறநெறிப் பாடசாலைகளையும் அமைத்துக் கொடுத்துள்ளார். தொண்டுநாதன் சுவாமிகள் சிவபூமி அறக்கட்டளை, மனிதநேயம் அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து செயற்பட்டு வருவதையும் சிறப்பாகக் கூறலாம்.

இவர் உலகளாவிய ரீதியில் இதுவரை 56நாடுகளுக்குச் சென்று ஆன்மீக சமய சமூகப் பணிகளை ஆற்றியுள்ளார். இவருக்கு குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் ரிஷி தொண்டுநாதன் என்ற தீட்சாநாமத்தை வழங்கியபோது "தீட்சா நாமத்திற்கு ஏற்ப வாழ்"என்றும் ஆசி வழங்கினார். இந்த தீட்சாநாமத்திற்கு அமைய சிவதொண்டு சிவதியானமே தனது வாழ்வின் முக்கிய குறிக்கோளாக கொண்டுள்ள இவருடைய பணிகள் தாய்நாட்டில் மட்டுமன்றி சர்வதேசத்திலும் தொடர்ந்து கொண்டிருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.



இக்கட்டுரை கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டச் சைவ சிறுவர்களால் பிரசுரிக்கப்படுகிறது.

# 16 ஆவது பெனடிக்ட் திருத்தந்தைக்கு இரங்கல் தெரிவிக்க கொழும்பு அபோஸ்தலிக்க தூதரகத்துக்கு ஜனாதிபதி விஜயம்

முன்னாள் பரிசுத்தப் பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ட் திருத்தந்தை இறைபதமேந்தியதையொட்டி அவருக்காக இரங்கல் தெரிவிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (புதன்கிழமை) முற்பகல் கொழும்பிலுள்ள அபோஸ்தலிக்க தூதரகத்திற்கு விஜயம் செய்தார்.

இலங்கைக்கான வத்திக்கான் அபோஸ்தலிக்க தூதுவர் புனித பிரையன் உடேக்வே ஆண்டகையைச் சந்தித்த ஜனாதிபதி, அவருடன் சிறு உரையாடலில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட நூலில் குறிப்பொன்றையிட்டதுடன், பதினாறாம் பெனடிக்ட் பரிசுத்தப் பாப்பரசரின் படத்திற்கும் அஞ்சலி செலுத்தினார்.





# பாடசாலைகளில் மாணவர்களை உள்ளீர்க்கப் புதிய பொறிமுறை!

பாடசாலைகளில் 2 ஆம் தரம் தொடக்கம் 11ஆம் தரம் வரைக்கும் மாணவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்கான புதிய பொறிமுறையை அறிமுகப்படுத்தல் (6ஆம் தரம் தவிர்ந்த) தற்போது நடைமுறையிலுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தி இடைத்தரங்களில் பாடசாலையை மாற்றுவதற்கு உண்மையான தேவையுடையவர்களை அடையாளங்கண்டு, அனைத்து மாணவர்களுக்கும் நியாயமானதும் சமமானதுமான வாய்ப்புக்கள் கிடைக்கும் வகையில் புதிய பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது காணப்படுகின்ற 1-5 ஆம் தரம் வரைக்கும் ஒரு வகுப்பில் உயர்ந்தபட்ச மாணவர்களின் எண்ணிக்கை 40 உம், மற்றும் 6-11 ஆம் தரம் வரைக்கும் ஒரு வகுப்பிற்கு உயர்ந்தபட்ச மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆகவும் குறித்த பொறிமுறையை மாற்றியமைக்காமல் மேற்கொண்டு செல்வதற்கும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இலங்கைக்கு 2022 இல் மொத்தம் 7 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை!

2022 ஆம் ஆண்டில் மொத்தம் 7 லட்சத்து 19 ஆயிரத்து 978 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக டிசெம்பர் மாதத்தில் 91 ஆயிரத்து 961 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். ரஷ்யாவிலிருந்து 19 ஆயிரத்து 963 சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவிலிருந்து 17 ஆயிரத்து 350 பேரும், இங்கிலாந்திலிருந்து 7 ஆயிரத்து 879 பேரும், ஆஸ்திரேலியாவிலிருந்து 5 ஆயிரத்து 158 பேரும், ஜேர்மனியைச் சேர்ந்த 4 ஆயிரத்து 984 நபர்களும் இவர்களில் உள்ளடங்குகின்றன குறிப்பிடப்படுகின்றது. இதேவேளை, கடந்த ஆண்டு இந்தியாவில் இருந்து அதிகமாக ஒரு லட்சத்து 23 ஆயிரத்து நான்கு பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.




## கொழும்பு - கதிர்காமம் பஸ் சேவைகள் இரத்து!

கொழும்பிற்கும் கதிர்காமத்திற்கும் இடையிலான அரை சொகுசு பஸ் சேவைகளை நேற்று (புதன்கிழமை) நள்ளிரவு முதல் இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை போக்குவரத்து அமைச்சர் பந்துல குன்வர்தன விடுத்துள்ளார்.

## நானு ஓயா டெஸ்போட் ஆலயம் உடைத்து திருட்டு

நானுஓயா பொலிஸ் பிரிவில் உள்ள டெஸ்போட் கீழ்



பிரிவு ஸ்ரீகருமாரி அம்மன் ஆலயத்தை உடைத்து அம்மனின் தங்க நகைகள், உண்டியல் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தால் நானுஓயா பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்பட வில்லை எனவும், விசாரணைகளை மேற்கொள்ளும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்தின் பின் நுழைவாயில்உடைக்கப்பட்டுஉள்ளே நுழைந்த இனந்தெரியாதவர்கள் இந்த ஆலயத்தில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான அம்மனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த தாலியையும், ஆலய முன்றிலில் வைக்கப்பட்டிருந்தஉண்டியலும்உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நல்லிணக்கச் செயற்பாட்டின் முன்னேற்றம் தொடர்பாக ஐ.நா. உதவி செயலர் நாயகத்துக்கு பிரதமர் விளக்கம்

பொருளாதார மீட்சிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், நீண்ட கால உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான திட்டங்கள் மற்றும் நல்லிணக்கச் செயற்பாட்டின் முன்னேற்றம் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன, ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜாவிற்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகமும், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவி நிர்வாகியும், ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பிராந்தியப் பணியகத்தின் பணிப்பாளருமான கன்னி விக்னராஜா மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கிடையிலான சந்திப்பு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெளிவுபடுத்தினார். இதன் போது கன்னி விக்னராஜா சமூக அரசியல் அபிவிருத்திக்கான இலங்கையின் திட்டங்கள் தொடர்பாகவும் பாராட்டு தெரிவித்தார். 'இலங்கை சரியான திசையில் மீள்வதை நாங்கள் பாராட்டுகிறோம்,' என்று தெரிவித்த அவர், தமது தொடர்ச்சியான உதவியையும் உறுதிப்படுத்தினார்.

இதன் போது கன்னி விக்னராஜா அண்மையில் உதவிச் செயலாளர் நாயகமாகப் பதவி உயர்வுபெற்றமைக்காக பிரதமர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். பேண்தகு அபிவிருத்தி இலக்குகள், பசுமைப் பொருளாதாரம், சமூக ஒற்றுமை மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பான இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்காக அவர் பிரதமரை சந்தித்தார்.

பொருளாதார மீட்சிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நீண்ட கால உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான திட்டங்கள் தொடர்பாகப் பிரதமர் அவருக்கு விளக்கியதுடன், நல்லிணக்கச் செயற்பாட்டின் முன்னேற்றம் பற்றியும் விளக்கினார். பெரும்பாலான கைதிகள் விடுவிக்கப்பட்டு, கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விவசாய மற்றும் கடற்றொழில் வாழ்வாதாரங்கள் வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.



உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா, நாட்டின் முன்னுரிமைகள் பற்றிய சிறந்த விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதும் இலங்கைக்கு உதவுவதற்கான புதிய வழிகள் குறித்து ஆராய்வதும் குறிப்பாக சமூக பொருளாதார மீட்சிக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் குறித்த பின்தொடரலில் கவனம் செலுத்துவதுமே தனது நோக்கம் என குறிப்பிட்டார்.

# போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு (2022) மாத்திரம் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் 742 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நடத்தப்பட்ட சிகிச்சைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதேவேளை இவர்களில் 20 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐஸ் மற்றும் கஞ்சாவுக்கு அடிமையானவர்களும் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகரிப்பு முன்னைய ஆண்டுகளை விட பல மடங்கு அதிகம் என்று மருத்துவத்துறை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

# சமையல் எரிவாயு விலை இன்று குறைக்கப்படும் !

## லிற்றோ நிறுவனம் அறிவிப்பு

லிற்றோ உள்நாட்டு சமையல் எரிவாயுவின் விலை இன்று (வியாழக்கிழமை) குறைக்கப்படும் என லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி 12.5 கிலோ சிலிண்டர் விலை 200 முதல் 300 ரூபா வரையில் குறைக்கப்படும் என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.




காலைக்கதிர் Kalaikkathir

# 5 டிரில்லியன் டொலர் பொருளாதாரம் இந்தியாவின் இலட்சிய இலக்கு அது!

## அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு 5 வீதத்துக்கும் குறைந்த பணவீக்கமும் 6.5 வீத ஆண்டு பொருளாதார வளர்ச்சியும் அதனை எட்டப் பண்ணும்




இந்தியாவில் 6.5 வீத ஆண்டு பொருளாதார வளர்ச்சி, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு 5 வீதத்துக்கும் குறைவான பணவீக்கம் என்பன இந்தியாவை 5 டிரில்லியன் டொலர் பொருளாதாரமாக மாற்றும் மத்திய அரசின் இலட்சிய இலக்குக்கு முக்கியமானவை என்று தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமியற்றுபவர்கள் குழு மத்தியில் பரப்பப்பட்ட ஒரு பின்னணி அறிக்கை தெரிவிக்கிறது.

ஜேர்மனி மற்றும் இங்கிலாந்தின் பொருளாதார வளர்ச்சியை மிஞ்சும் இலக்கை நோக்கி பொருளாதாரத்தை உந்தும் 16 முக்கிய காரணிகளை அந்த தாள் கோடிட்டுக் காட்டியுள்ளது.

அமெரிக்க பணவீக்கமான 3 வீதத்துக்கு அருகில் இந்தியாவின் பணவீக்கம் 5.0 வீதத்துக்கும் குறைவாகவும், 6.5 வீத சராசரி வருடாந்திர விகிதத்தில் வளர்ச்சியடையும் பட்சத்தில், 2026 - 27 க்குள் 5 டிரில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதாரமாக இந்தியா மாறும் என்று அது கூறியது.

2027 - 28 இல் இந்தியா 5 டிரில்லியன் டொலர் பொருளாதாரமாக மாறும் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் முன்னறிவிப்புகளை மேற்கோள் காட்டி நவம்பரில் வெளியிடப்பட்டது அந்த அறிக்கை.




இதற்காக, 2023 - 24 மற்றும் 2027 - 28 க்கு இடையில் அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியா உண்மையான அடிப்படையில் 6.5 வீத சராசரி ஆண்டு வளர்ச்சியில் வளரும். இந்த காலகட்டத்தில் சர்வதேச நாணய நிதியம் சராசரி ஆண்டு பணவீக்க விகிதத்தை 4.7 வீதமாகவும், அமெரிக்க டொலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு விகிதம் 2.1 வீதமாகவும் இருக்கும் எனக் கணக்கிடுகின்றது.




இந்தியா மற்றும் அமெரிக்காவின் பணவீக்க விகிதங்களுக்கு இடையிலான இடைவெளியை தேய்மான விகிதம் பிரதிபலிக்கிறது. பெரிய இடைவெளியாயின், தேய்மான விகிதம் அதிகமாகும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் அமெரிக்காவின் சராசரி ஆண்டு பணவீக்க விகிதத்தை 2.3 வீதம் என்று சர்வதேச நாணய நிதியம் அனுமானித்துள்ளது, என்று பின்னணி அறிக்கை கூறியது.

இந்தியாவை 5 டிரில்லியன் டொலர் பொருளாதாரமாக மாற்றுவது பிரதமர் நரேந்திர மோடியின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகும். கடந்த ஆண்டு ஜூன் மாதம், மாநிலத் தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில் மோடி, ஒவ்வொரு மாநிலமும் அதன் வலிமையை அங்கீகரிக்க வேண்டும். அதன் இலக்குகளை வரையறுத்து, அதை அடைய ஒரு சாலை வரைபடத்தை உருவாக்க வேண்டும். இந்தியா 5 டிரில்லியன் டொலர் பொருளாதாரமாக மாற இது மிகவும் அவசியம்." - என்றார்.

2014 இல் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மத்தியில் ஆட்சிக்கு வந்தபோது இந்தியப் பொருளாதாரம் சுமார் 1.85 டிரில்லியன் டொலராக இருந்தது. 2022 இல் 3.25 டிரில்லியன் டொலர் பொருளாதாரமாக உள்ளது.

60கள் மற்றும் 70களில் நடந்தது போல், அடுத்த ஐந்து ஆண்டுகளில் அமெரிக்க பணவீக்க விகிதம் சராசரியாக 2.3 வீதத்துக்கும் அதிகமாக இருக்கும் என்று பின்னணிக் கட்டுரை கூறியது. அது உண்மையில், அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாய் பலவீனத்தை விட ரூபாயின் வலிமையை இந்தியா நிர்வகிக்கும். அதிக சராசரி அமெரிக்க பணவீக்கம் ஏற்பட்டால், 2026 - 27 ஆம் ஆண்டிலேயே இந்தியா 5.0 டிரில்லியன் டொலர் அளவை மிகவும் வசதியாக தாண்டும்.

தொற்றுநோய்களின் போது குறைவான பொறுப்புகளை எடுத்துக் கொண்டு, பணமதிப்பு நீக்கம் மூலம் தங்கள் இருப்புநிலைக் குறிப்பை வலுப்படுத்தி, கார்ப்பரேட் துறையும் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாகவும் அரசாங்கத்தின் பின்னணிக் கட்டுரை சுட்டிக்காட்டியுள்ளது.

அவர்களின் திறன் பயன்பாடு 75 வீதம் கடந்துவிட்டது, இது பொதுவாக உற்பத்தி திறனை மேலும் சேர்ப்பதற்கான ஓர் அளவுகோலாகக் கருதப்படுகிறது என்று அந்த அறிக்கை கூறியது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியானது டிஜிற்றல் பொதுப் பொருள்கள், உள்ளடக்கிய நிர்வாகம் மற்றும் கடந்த சில ஆண்டுகளில் வளர்க்கப்பட்ட அதிகாரம் பெற்ற பயனாளிகளின் கூடுதல் ஆதரவைக் கொண்டிருக்கும் என்று அது கூறியது.

ஒரு பில்லியனுக்கும் அதிகமான வங்கிக் கணக்குகள், ஒரு பில்லியன் மொபைல் போன்கள் மற்றும் ஒரு பில்லியன் டிஜிற்றல் அடையாளங்கள் (ஆதார்) ஆகியவற்றின் அடித்தளத்தை மேம்படுத்துவதன் மூலம் இந்தியா முற்றிலும் புதிய டிஜிற்றல் பொருளாதாரத்தை உருவாக்கியுள்ளது. காகிதமற்ற மற்றும் பணமில்லா முறையில் பரிவர்த்தனை செய்ய ஒவ்வொரு தனிநபருக்கும் வணிகத்திற்கும் அதிகாரம் அளிப்பதை இது அடிப்படையாகக் கொண்டது. மேம்படுத்தப்பட்ட வர்த்தகம் மற்றும் எளிதாக வணிகம் செய்வதில் கவனம் செலுத்துவது புதிய கால'ஃபின்டெக்' (FinTech) நிறுவனங்கள் மற்றும் ஸ்டார்ட் அப்களின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்தது. தனிநபர்கள் மற்றும் MSMEகள் (மைக்ரோ, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள்) மைக்ரோ கிரெடிட் அணுகல் சவால்களை சமாளிக்க, அரசாங்கம் சமீபத்தில் கணக்கு திரட்டி நெட்வொர்க்கை வெளியிட்டது.

சரக்கு மற்றும் சேவை வரி, வருமான மிதப்பை வலுப்படுத்த, வரிச் செயல்திறனில் முன்னேற்றங்களைச்செயல்படுத்தும் அதே வேளையில், அம்முறைமை தற்போது முதிர்ச்சியடைந்துள்ளது என்றும் அந்தப் பின்னணிக் கட்டுரை வாதிட்டது. செப்டெம்பர் 30, 2020இல் ஒரே நாளில் தொற்றுநோய்களின் போது சுமார் 11 மில்லியன் மின்னணு வழி பில்கள் மற்றும் இன்வாய்ஸ்கள் ஜி.எஸ்.டி. போர்ட்டலில் ஒரு தடுமாற்றமும் இல்லாமல் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதை இது கோடிட்டுக் காட்டுகிறது.

ஜி.எஸ்.டி. போர்டல் போக்குவரத்து நேரத்தைக் குறைப்பதற்கும் அதன் விளைவாக பொருளாதாரச் செலவுகளைக் குறைப்பதற்கும் மேலும் பங்களித்துள்ளது. மாதாந்திர ஜி.எஸ்.டி. வசூல் இப்போது ரூபாய் 1.4 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது, வளர்ச்சிச் செலவினங்களுக்காக அரசாங்கத்திற்கு முக்கியமான ஆதாரங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் பொருளாதாரத்தை முறைப்படுத்தவும் உதவுகிறது. இந்திய மாநிலங்கள் இதற்கு முன்பு அனுபவிக்காத வலுவான விற்பனை வரி வருவாய் வளர்ச்சியின் பலன்களை இப்போது பெறுகின்றன என்று அந்தத் தாள் கூறியது.

**(மூலம்: 'ஹிண்டுஸ்தான் ரைம்ஸ்')**



காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அரசோடும் பிராந்தியங்களோடும் கைகலக்கும் தனி மனித உரிமைகள்





- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 232

சுயநிர்ணய உரிமை தனி மனிதனுக்குரியது. அந்தத்தனி மனிதன் தன்னோடு சேர்ந்த குழுமத்துடன் அவர்கள் யாபேரும் இணைந்து, தங்களது சுய உரிமைகளைக் கோரலாம். ஆனால் ஒரு வரையறுக்கப்பட்ட அரசுக்கு சுயநிர்ணமி உரிமைகள் இருப்பதில்லை.

வல்லபாய் பட்டேல் இந்தியாவிற்காக, மற்ற மாநிலங்களின் மக்களை இணைத்த போது, அவர்களது விருப்பத்தையோ, சுயநிர்ணைய உரிமைகளையோ கணக்கெடுக்கவில்லை. சுதந்திரம் பெற்ற இந்தியா உறுதிப்படுத்தப்பட வேண்டும், அது நிலைக்க வேண்டும் என்பது யாவரதும் எதிர்பார்ப்பாகவும் இருந்தது. தனது ஆளுமையினால், அதனை அவர் நிஜப்படுத்தினார். இதனால் தீவிரவாத இந்துத் தரப்புகளால் அவரே உண்மையான தேசத் தந்தையாகப் பார்க்கப்பட்டார்.

காங்கிரஸ் ஆட்சி நீங்கி, ஆர்.எஸ்.எஸ். இன் பின்னணியில் நரேந்திர மோடி உருவாகி, 'ஹிந்துத்துவாவை' முன்னெடுக்கும் போது, கோட்சே நினைவு கூரப்படுவது துரோகம் என விமர்சிக்கப்படுவதில்லை. வல்லபாய் பட்டேலுக்கு நாட்டின் தேசிய தலைவராக பிரம்மாண்டமான சிலைகள் மோடியினால் திறந்து வைக்கப்படுகின்றன. ஆதலால் வல்லபாய் பட்டேலால் கல்லில் எழுதி, பொறிக்கப்பட்டவைதான், இந்தியா தங்களது மாநிலங்கள் எதிலும் அதுவோ அதன் ஒரு பகுதியோ சுயநிர்ணயக் கோரிக்கைகளில் பிரிந்து போகும் உரிமை அனுமதிக்கப்பட மாட்டாது என்பது. எந்த மாநிலத்தில் அந்தக் கோரிக்கை இருந்தாலும், அது நிர்வாகத்தில் எழுதப்பட்டு, பின்பற்றப்பட்ட நியதிகளிலேயே கையாளப்பட்டது. காலத்துக்குக் காலம் 'காலிஸ்தான்' போன்று எழுந்த பிரச்சினைகள், அதற்கு சர்வதேசத்தில் வாழ்ந்த சீக்கியர்களிடமிருந்து பலத்த ஆதரவு இருந்ததால், திட்டவட்டமாக ஒடுக்கப்பட்டது.

ஆனால் தென்னாட்டில் ஆந்திர பிரதேசத்தில் எழுந்த 'தெலுங்கு தேசம்' கோரிக்கை மத்திய அரசின் நன்மைகளை ஒட்டியும், தேர்தல் அரசியலில் வரக்கூடிய வாக்குகளைக் கணித்தும் இணக்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, 'தெலுங்கு தேசம்' என்ற சுயாட்சிப் பகுதியும் அதிகார பகிர்வும் மத்திய அரசுடன் ஏற்படுத்தப்பட்டன.

அதே கொள்கையைத்தான் இந்தியா தமிழர் பிரச்சினையை ஒட்டி பின்னர் ஸ்ரீலங்காவிலும் கையாண்டது. ஸ்ரீலங்கா இறைமையுள்ள நாடு. அங்கு மேலத்தேய நாடுகள் கடைப்பிடித்த சுயநிர்ணய உரிமைகளின் நடைமுறைகளில் அதனை உள்நாட்டுப் பிரச்சினையாகவும் அதிகார பரவல் விவகாரமாகவும் கணித்தது. தமிழ் மக்கள் வேறுவிதமான அபிலாசைகளும், தங்களது அனுபவங்களால் சுயநிர்ணயத்தில் பிரிவினைக்கு ஆதரவை இந்தியாவிடம் இருந்து எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் இந்தியாவோ தனது நாட்டில் கையாண்டு கொண்டிருக்கும் அடிப்படையில் தங்களுடைய பிரிவினைவாதிகளுக்கு உத்வேகம் தராத விதத்தில், தீர்வுகள் நோக்கி முன்னேற தீர்மானங்கள் எடுத்தது. இறைமையுள்ள ஒரு நாட்டை ஆக்கிரமித்து, 'அசிங்கமான இந்தியன்' எனப் பிராந்தியத்திலும், சர்வதேசத்திலும் தன் தரத்தை குறைத்துக் கொள்ளவும் அது விரும்பவில்லை. அதேசமயம் தனது பிராந்திய நலனுக்கும் அதிகாரங்களுக்கும், ஸ்ரீலங்காவின் அனுசரணையோடும் நல்லெண்ணத்தோடும் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா



இருந்தது. தனிமனித உரிமைகள் நாட்டின் நலனுக்கோ அன்றில் அதன் பாதுகாப்புக்கோ என வரும்போது சுருங்குகின்றன. அவை மீறப்படும் போது, இந்த விளக்கத்தையே சர்வதேச நாடுகள் பயன்படுத்துகின்றன. பிராந்தியத்தின் நலனுக்கு இந்தியாவால் ஸ்ரீலங்காவின் பிரிவையோ, அதற்காக தமிழ் மக்களுக்கு இருந்த சுயநிர்ணய உரிமையையோ ஸ்ரீலங்கா மட்டுமல்ல, இந்தியாவும் ஏற்றுக்கொள்ளவில்லை. அது திம்பு மாநாட்டு காலங்களில் இருந்தே தெரியப்பட்ட நிதர்சனங்கள். அதன்பின் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசம் என்ற முன்னெடுப்பைத் தான் வைத்தார்கள்.

ஆகவே தமிழ் மக்கள், அன்றில் அவர்களின் ஆளுமை மிக்க பகுதிகள், இந்தியாவை ஆயுத ரீதியாகவோ, அரசியல் மூலமாகவோ கவனித்து, அப்புறப்படுத்திக் கொண்டு, தங்கள் திசைகளை நோக்கிப் போகலாம் எனக் கணித்து, பல காத தூரங்கள் அர்ப்பணிப்புடன் நடந்தாலும், இதுவரை உரிய இடம் சென்று சேரவில்லை. 1987 இலேயே சுயநிர்ணய உரிமைகளைக் கைப்பிடித்து, 13 ஆம் திருத்தத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா என்ற கேள்விகளோடு நிற்கிறார்கள். அது, யதார்த்தம் என்ற பெயரில் உருவாக்கப்படும் அரசியல் மாயை என்றும், 13ஆவது திருத்தத்தில் ஒன்றுமே இல்லை, அதை எப்படி முதற்படி எனக் கருதி முன்னேறுவது எனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர்கள் கேட்கிறார்கள்.

சுய நிர்ணய உரிமைகள் என்பவை அலங்காரமாக சர்வதேச சட்டங்களில் உள்ளன. ஆனால் அவற்றின் நடைமுறைப்படுத்தல்களில் உள்ள சர்வதேச மாறுபாடுகளையும், வித்தியாசங்களையும், புவியியல் அரசுகளின் அழுத்தங்களையும், ஆதரவுகளையும், கணித்துக் கொள்ள வேண்டும்.

வறட்சிகள் கடந்து, காலங்கள் மாறி, மழை பொழியலாம் என்று பிரார்த்தனைகளில் இருக்கலாம். ஆனால், காலங்களின் வறட்சி தொடர்ந்து கொண்டே இருந்தால் விதையிடக்கூடிய மண்ணே இருக்காது என்ற நிலையும் வரலாம்.

### சுயநிர்ணய உரிமையும் சர்வதேசங்களும்

பொதுவாக சுயநிர்ணய உரிமை சர்வதேச சட்டங்களில் உள்ளடக்கப்பட்டது. இரண்டாவது உலக யுத்தத்தின் பின் அப்பொழுது வல்லமையில் இருந்த அரசுகளினால் ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளான நாடுகளை மனதில் கொண்டுதான் இவை வரையறுக்கப்பட்டன. என்றாலும், காலனி நாடுகளை வைத்திருந்த ஐரோப்பிய நாடுகள், போர் முடிவிலும் தங்களது காலனித்துவத்தை வேரூன்றி பாதுகாத்துக் கொள்ளும் அமைப்பிலேயே இருந்தன.

ஆகவே, அந்த நாடுகள், சர்வதேச சமுதாயம் தங்களது காலனி நாடுகளில் சுயநிர்ணயத்தை ஆதரிப்பது, தங்களது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகக் கருதி, அத்தகைய தலையீடுகள் உண்மையில் சர்வதேச சட்டங்களை மீறுவதானது என்ற வாதங்களை முன்னெடுத்தன.

ஆயினும் காலனித்துவத்தால் ஒடுக்கப்பட்ட மக்கள், தங்களது சுதந்திரத்திற்காக, சுயநிர்ணய உரிமைகளில், போராட்டங்களை முன்னெடுத்தாலும், 1989 வரையில் பங்களாதேசம் ஒன்றே இறைமையுள்ள நாட்டினில் இருந்த சிறுபான்மை மக்கள் தனிநாடாக உருப்படுவதாக அமைந்தது. பாகிஸ்தான் நாட்டின் சர்வதேச இறைமைக்குள் கிழக்குப் பாகிஸ்தானில் வங்காளி மொழி பேசிய மக்களே இந்த விடுதலையை பெற்றவர்கள்.

ஆபிரிக்கப் பிராந்தியத்தில் காலனித்துவத்திற்கு அறியப்பட்டிருந்த நாட்டில் எழுந்த விடுதலைப் போராட்டங்கள் எத்தனையோ அடக்குமுறைகளால் வீழ்த்தப்பட்டன.

1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பற்றி வியன்னாவில் (ஆஸ்திரியா) நடத்தப்பட்ட சம்மேளனத்தில் சுயநிர்ணய உரிமைகள் வரையறைவு செய்யப்பட்ட எல்லைகளுக்கு உள்ளேயே கோரப்பட வேண்டும் என்ற விளக்கங்கள் தரப்பட்டன.

முன்னைய இலங்கை, இந்தியாவை உதாரணமாக கொண்டால், அவர்களது காலனித்துவ எஜமானர்கள் தங்கள் ஆளுமைகளின் வசதி கருதி, இனம், மதம், தேசங்கள் என்றோ, அந்த மக்களின் வாழ்வு முறைகளையும் கணக்கெடுக்காது, அவற்றை ஒன்றாக்கி, நாட்டின் எல்லைகள் ஆக்கி, ஆண்டு வந்தார்கள். அதுபோல காலனித்துவம் முடிந்த போதும் மக்களின் இனவாழ்வுவிழுமியங்களை பார்க்காது இலங்கையை ஒன்றாக பெரும்பான்மையிடமும், இந்தியாவின் குறுக்கே பாகிஸ்தானை உருவாக்க கோடுகள் கீறினார்கள். சுதந்திர வேட்கைக்காக அவற்றை ஏற்க வேண்டி இருந்தது. இது போலவே கிழக்கு ஐரோப்பாவில் மெஸிடோனியா, அல்போனியா, கொசாவே, சேர்பியா போன்ற பெரிய தேசங்கள் யூகோஸ்லாவியாவில் கட்டுண்டு கிடந்தன. அதேபோல கிருமியா, பெலாரஸ், உக்ரைன் போன்ற பரந்த சுயாட்சி பிரதேசங்கள் ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் அதிகாரத்தில் கட்டுப்பட்டிருந்தன.

அவற்றின் விவரங்களைத் தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்....)



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
## Ishwaryam Banquet Hall



**Tel:- 021 228 3701, 071 7354308**

**Whatsapp:- 071 7736 4308**

**No.315, Kandy Road,
Kilinochchi**



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று பஞ்சரத பவனி

## காரைநகரில் தில்லைக்கூத்தனின் ஆனந்தக்கூத்து அவனருளும் குதூகலமும் குறைவின்றி நிறைகின்றன

- வே.சிவகுருநாதன் -



காரைநகர் ஓர் சிவபூமி என்று சொன்னால் தற்புகழ்ச்சியல்ல. கண்ணோட்டத்தோடு நோக்குகையில் அவ்வுண்மை நிலைநிறுத்தப்படுகின்றது. இற்றைக்கு 300 ஆண்டுகளிற்கு மேல் சரித்திரப் பெருமை உடையதென்பதும், அகத்திய முனிவர், துர்வாசமுனிவர், தினகரமுனிவர், ஆண்டி முனிவர் வாழ்ந்து தவம் செய்தார்கள் என்பது சரித்திரம் கூறும் உண்மையாகும்.

### ஆண்டி முனிவர் வருகை

போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் சைவ ஆலயங்களை இடித்து அவை தரைமட்டமாக்கப்பட்டன. சைவர்களால் அவ்வாலயங்களில் இருந்த விக்கிரகங்கள் மறைத்தும், புதைத்தும் வைக்கப்பட்டிருந்தன. பின்னர் வந்த ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கெடுபிடிகள் நீங்கி, சைவமக்கள் மூச்சுவிடக் கூடியதாக இருந்தது.

இக்காலத்தில் (18 ஆம் நூற்றாண்டு நடுப்பகுதியில்) இந்தியாவில் இருந்து ஆண்டி முனிவர் காரைநகருக்கு வந்தார் என்றும், அவர் வியாவில் பகுதிக்குப் போனபொழுது எழுநிலை கோபரத்துடன் பல சிறப்புக்களோடு இருந்த ஆலயம் அந்நியரால் அழிக்கப்பட்ட செய்தி அறிந்து மனம் கலங்கி கவலைப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

அன்றிரவு ஐயனார் கனவில் தோன்றி தானே "நீ நீயே நான். கவலைப்படாதே. இத்தீவின் வடக்குப் பக்கத்தில் உள்ள திண்ணபுரத்திலுள்ள அரசமரத்தின்கீழ் இருக்கிறேன். அங்கு வருக!' – எனக் கூறினார்.

திண்ணபுரத்திற்கு சென்ற ஆண்டி முனிவர் அவ்விடத்தில் அரசமரத்தைக் கண்டதும் ஆனந்தப் பரவசமடைந்து, துப்பரவாக்கி, ஒரு சிறு குடில் அமைத்து, தம்மோடு கொண்டு வந்த வைரவர் சூலத்தை வைத்து, ஆன்மார்த்த வழிபாடு செய்து வரலானார். சில காலம் செல்ல அப்பகுதியில் ஒரு தீப ஒளி மாலைப்பொழுதில் தோண்ட அவ்விடத்தை அகழ்ந்தபோது பூரணை பொற்கலைசமேத ஐயனார் விக்கிரகம் வெளிப்படவே அதனை எடுத்து, தூய்மை செய்து வைரவர் விக்கிரகத்துடன் வைத்து ஆன்மார்த்த வழிபாடு செய்து வரலானர். ஆன்மார்த்த வழிபாடு அடியார்கள் கூடிச் செல்ல பரார்த்த வழிபாடாகியது.

### அம்பலவி முருகர்

இந்த அரசமரம் அமைந்த காணி (400பரப்பு) அம்பலவி முருகருக்குரியது. இவ்வழிபாட்டை ஓர் அன்பர் மூலம் அறிந்து கொண்ட அம்பலவி முருகர். இவ்வழிபாட்டில் கலந்துகொண்டார். ஆண்டி முனிவரைக் கண்ட அம்பலவி முருகர் அவர் வசமானார். குருசீடமுறையில் ஒழுகி வரலானார். குருவின் வார்த்தைப்படியே குரு சமாதியான பின்னர் அரசின் வடபக்கத்தில் ஐயனார் ஆலயம் அமையச் செய்து ஆனி உத்தரத்தைத் தீர்த்த தினமாகக் கொண்டு, கும்பாபிஷேகம் மஹோற்சவமும்,



மார்கழி திருவாதிரையைத் தீர்த்த தினமாகக் கொண்டு அலங்கார உற்சவமும் தாம் அமைத்த ஐயனார் கோவில் செய்து வரலானர். அத்துடன் தமது கையால் திருவாசகத்தை ஏட்டில் எழுதி, மார்கழி திருவாதிரை நாளில் முற்றோதலும் செய்து வரலானார்.

அம்பலவி முருகர் ஐயனாரது வழிபாட்டில் தில்லை நடராசரின் தரிசனத்தைக் கண்டார் என்றும், தாம் கண்ட காட்சியை சைவமக்கள் காணவேண்டும் என ஐயனாரை வேண்டினார் என்றும், அவர் அருளால் ஐயனார் கோவிலின் வடபக்கத்தில் சிவாலயத்தை அமைத்தார் என்றும், அச்சிவாலயத்தில் அமைந்திருக்கும் நடராசர் வடிவம் மிகவும் அற்புதமானதென்றும், இவ்வரலாற்றுப் பெருமை கோவிலின் தலபுராணமான ஈழத்து சிதம்பரபுராணம் எடுத்து இயம்புகின்றது.

### பக்தரின் அனுபவம்

ஐம்பது வருடங்களுக்கு முன் வாழ்ந்த அன்பர் திருவெம்பா விழா பற்றி குறிப்பிடுகையில் – மார்கழி மாதம் கிட்டகிட்ட என்னை அறியாமல் எனக்கு ஒரு வினோத உணர்ச்சி உண்டாகிவிடுகிறது. திருவாதிரைப் பெருவிழா நாளையிட்டு நந்தன் எப்படியான பைத்தியங்கொண்டு சிதம்பர யாத்திரையை ஆரம்பிதானே அதேபோல் ஒர தெய்வீகப்பரவசம் என்னுட் குடிகொண்டு விடும். நான் இப்போது தவறாது யாத்திரை செய்யும் ஈழத்துச் சிதம்பரம் என்னை எங்கிருந்தும் ஈர்த்து இழுத்துவிடும்.

திருவெம்பாவை ஆரம்பித்துவிட்டால் எங்கள் கிராமமே ஒரு தெய்வீகத் தன்மையை அடைந்து விடுவதாக என் கண்களுக்குத் தோன்றுகின்றது. அதிகாலையில் வீதி தோறும் சங்குநாதமும் திருவெம்பாவைப் பாடலும் மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் கண்ட காட்சியை நினைவுறுத்தும். யாரைப் பார்த்தாலும் புனிதமாகவும் விபூதிப்பூச்சுடனும் திருவாசகப் பாடலுடனும் பக்திப் பரவசத்தோடு காட்சியளிப்பார்கள். இந்தப் பத்து நாட்களும் கோயிலுக்குப் போவதும் கும்பிடுவதும் யாத்திரிகளுக்குத் தொண்டுசெய்வதும் உணவளிப்பதுமே இவர்களின் முக்கிய வேலையாக இருக்கும். கோயிலிலும் மடாலயங்களிலும் வீதிகளிலும் திருவாசகமே ஒரு வாசகமாகத் தோன்றும். என் கண்களுக்கு இந்த பத்து நாட்களும் எமது ஈழத்துச் சிதம்பரத்தில் நடப்பது மாணிக்கவாசகப் பெருமானின் விழா எனத் தோன்றுகிறதேயொழிய வேறுன்றுமாய்த் தோன்றவில்லை. – என்பார்.

### யோகர் சுவாமி கூறியது

இவ்வாலயச் சூழலிலுள்ள வடக்கு வீதியிலுள்ள உத்தரகோசமங்கையில் இருந்து மங்களேஸ்வரக் குருக்கள் பரம்பரை வழித்தோன்றல் சரவணபவக்குருக்கள் (பிரதம குரு ஈழத்துச்சிதம்பரம்) இல்லத்திற்கு இருபது காலங்களில் வந்துபோன கொழும்புத்துறை யோகர்சுவாமிகள் ஒருநாள் அப்போதைய கோவில் ஆதினகர்த்தா துரையப்பா (அம்பலவிமுருகர் வழித்தோன்றல்) அவர்களை கோவில் முன்றிலில் அழைத்து கோவிலைக் காட்டி 'இது கோவிலடா, கூத்து கொட்டகை ஆக்கிப் போடாதே!' எனத் திருவாய் மலந்தருளினார்.

### கிருபானந்தவாரியாரின் அனுபவக் கருத்து

திருப்புகழ் அமிர்த ஆசிரியர் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் 7.4.1947 ஆம் திகதி மாலை 6மணியளவில் இவ்வாலயத்தைத் தரிசித்து வழிபாடு செய்து மாணிக்கவாசக சுவாமி எனும் வியமாகச் சங்கீத கதா பிரசங்கம் செய்தார். அவர் மேற்படி ஆலயத்தைப் பற்றி குறிப்பிடுகையில் –

காரைநகரில் மிக மிக புனிதமாக பொலிவது சிவாலயம். இத்திருக்கோயிலிலுள்ள நடராசாமூர்த்தி காண்பார் கண்ணும் கருத்தும் ஒருங்கே கவரும் கவினுடையது. சிதம்பரம் நடராசப் பெருமானிற்று அடுத்தபடியாக அழகிய தோற்றத்துடன் அருட்பெரும் கோலமாகக் காட்சியளிக்கும் அம்பலவாணரைக் காணும்தோறும் தெவிட்டாத இன்ஊற்று சுரக்கின்றது. அடியேன் கண்டு கண்டு இன்புற்றேன். – என்றார்.

இங்கு எழுந்தருளியிருக்கும் நடராசா மூர்த்தியைக் கண்டு தொழுத சித்தாந்தமணி திரு.க.வக்கிரவேலு



முதலியார், திருவாடுதுறை ஆதின வித்துவான் திரு.வீரசிவசுப்பிரமணியம், அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்ப்பேராசிரியர் வித்துவான் ச.தண்டபாணி தேசிகர், கோயில் வரலாற்றிலும் மூர்த்தி அமைப்பு முறைகளிலும் நிரம்பி அறிவுள்ள திரு.தொ.மு.பாஸ்கரத்தொண்டமான் முதலான பெரியோர்கள் இத்திருவுருவத்தின் அழகை வாயாரப் போற்றியிருக்கிறார்கள்.

### ஈழத்துச்சிதம்பரம்

கூத்தப்பிரானிற்குரிய அபிஷேக ஆராதனைகள் தில் லைசிதம்பரத்தைப் பின்பற்றி நிகழ்த்தப் பெறுகின்றமை தில்லைக்கு வந்து என்னைத் தரிசிக்க முடியவில்லையே எனக் கவலைப்பட வேண்டாம், காரைநகர் திண்ணபுரத் துச் சிவாலயத்தில் என்னைத் தரிசிக்கலாம் எனச் சில அடியார்களின் கனவிலே தோன்றியமை போன்ற காரணங்களால் ஈழத்துச்சிதம்பரம் என்ற தனிச் சிறப்பிற்கு இலக்காகியுள்ள காரைநகர்த் திண்ணபுரம் செஜளந்தளம் பிகை உடனுறை சுந்தரேஸ்வரப் பெருமானின் திருக் கோவிலில் 28.12.2022 புதன்கிழமை திருவெம்பாவை உற்சவம் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

காரைநகர் மணிவாசக சபையின் மணிவாசகர் விழாவும் வழமைபோல் நடைபெறுகின்றது. இன்று 5.1.2023 பஞ்சரதபவனியும. நாளை 6.1.2023 அதிகாலை வசந்த மண்டபத்தில் கூத்தபிரானுக்குரிய ஆர்த்திரா அபிஷேகமும், அன்று மாலை நடராசப் பொருமானின் வீதி உலாவும் திருவூடலும் அதனைத் தொடர்ந்து தீர்த்த நிகழ்வு நடைபெறும் என்பது குறிப்பிடத் தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## ஆளுநரின் செயலர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டார்கள் என்று தெரிகின்றது.

இன்றைய கூட்டத்தில் அவர்கள் பங்குபற்ற மாட்டார்கள் என அந்தந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் மேயர் மணிவண்ணனின் தலைமையிலான அணியினர் மற்றும் உதிரி கட்சிகளைச் சேர்ந்த 10 முதல் 15 மாநகரசபை உறுப்பினர்கள் இன்றைய கூட்டத்தில் பங்குபற்றக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேர்தலைத் தடுத்தால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தை நாடி சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான எங்களுடைய முழுமையான அழுத்தத்தைக் கொடுப்போம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதேவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனு தாக்களுக்கான திகதி தேர்தல் ஆணைக் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. எமது கட்சியின் சார்பிலே தேர்தல்கள் பிற்போடகூடாது, அது ஜனநாயகத்தினை மீறுகின்ற செயல் எனத் தொடர்ச்சியாகக் கூறி வந்திருக்கிறோம்.

அரசாங்கம் இந்தத் தேர்தலை பிற்போடுவதற்கு எடுத்த முயற்சிகள் எங்களுக்கு தெரியும். எதுவும் கைகூடாத நிலைமையில் தேர்தல் ஆணைக்குழு சட்ட ரீதியாக அறிவித்துள்ளது. இந்த வேளையில் இதனை தடுப்பதற்கு சில முயற்சிகள் நடக்க கூடும். அவ்வாறு முயற்சிகள் எடுக்கப்படுமிடத்து உடனடியாக நாங்கள் நீதிமன்றத்தினை நாடி, சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான எங்களுடைய முழுமையான அழுத்தத்தைக் கொடுப்போம்.

சில வருடங்களாக நடத்தப்படாமல் இருக்கின்ற மாகாண சபை தேர்தலும் உடனடியாக நடத்தப்பட வேண்டும். மாகாண சபைகள் இயங்காமல் இருப்பது என்பது மிகவும் பாரிய பின்னடைவு. இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பினை பொறுத்தவரையில், எங்களின் மூலக்கிளையில், இருந்து இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கான விண்ணப்பதாரிகளை முன் வருமாறு கோரியிருக்கிறோம்.

இந்தத் தடவை சரியானவர்களையும், இளைஞர்களையும், யுவதிகளையும் தேர்தலில் முன் நிறுத்துவோம். மக்களின் ஆதரவினை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். – என்றார்.

## தேவாலயங்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மறைந்த முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்களின் அடக்கச் சடங்கு திருப்பலி இன்று வத்திக்கான் புனித பேதுருவானவர் பேராலயத்தில் நடைபெறவுள்ளது.

அவரின் அடக்கச் சடங்கு திருப்பலியுடன் இணைந்து எமது பங்கு ஆலயங்களிலும் மடங்களிலும் மற்றும் நிறுவனங்களிலும் வசதியான நேரங்களில் ஆன்மா இளைப்பாற்றி திருப்பலி ஒப்புக்கொடுப்போம்.

அத்துடன் ஆலயங்களிலும் மடங்களிலும் மற்றும் நிறுவனங்களிலும் அரைக்கம்பத்தில் திருத்தந்தையின் கொடியை ஏற்றி, இறுதிச் சடங்குகள் வத்திக்கான் நேரம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் போது இலங்கை நேரம் பிற்பகல் 2 மணிக்கு ஆலயங்களில் துக்க மணியை அடிப்போம் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கூட்டமைப்பு, விக்கி அணி,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

சமகாலநிலை தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசாங்கம் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள விரும்பாது. தேர்தல் எதையும் வைக்காமல் இருந்தால் சர்வதேசம் தவறாக கருதும் என்ற அடிப்படையில் உள்ளூராட்சி தேர்தலை அறிவித்து பின்னர் வழக்குகளை தாக்கல் செய்து தேர்தலை இழுத்தடிக்க முற்படலாம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிவருவதாக இருந்தால் நிலையான அரசாங்கம் அமையவேண்டுமென சர்வதேச நிதி நிறுவனங்கள் விரும்புகின்றன.

நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாமல் உள்ளூராட்சி தேர்தலை நடாத்துவது நெருக்கடியை அதிகரிக்கும். ஆனால், வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் இதனை உள்ளூராட்சி தேர்தலாக கருதாமல் ஆணை வழங்கும் தேர்தலாகக் கருத வேண்டும்.

ஒற்றையாட்சிக்குள் ஏக்கியராச்சியவை ஏற்றவர்கள், 13 ஆம் திருத்ததை ஏற்று இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதியவர்கள், வாக்குபெறுவதற்காக தற்போது தாயகம், தேசியம்,சுயநிர்ணயம் என்கிறார்கள்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு,விக்னேஸ்வரன் அணி,ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கூலிகள், போலித் தமிழ் தேசிய வாதிகள் ஆகியோரை இனங்கண்டு ஒதுக்கி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சைக்கிள் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். – என்றார்.






காலைக்கதிர்
Kalaikkathir

# தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மர நடுகைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல்களுக்கு மேலாக மேற்கொள்ளப்படும் மர நடுகைக்கு எதிராக நேற்று (புதன்கிழமை) பாரிய கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் அங்கு நடப்பட்ட பெயர்ப் பலகை மற்றும் மரக்கன்றுகளும் பிடுங்கி யெறியப்பட்டன.

மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டு குழுவின் தலைவர் லவக்குமார் தலைமையில் நேற்று காலை தரவையில் இந்த கண்டனம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தரவை மாவீரர் துயிலும் இல்லம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதானமான மாவீரர் துயிலும் இல்லமாகக் கருதப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த மாவீரர் துயிலும் இல்லத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் இராணுவமும் அரச புலானாய்வு துறையும் இணைந்து மரநடுகை என்ற போர்வையில் மேற்கொண்ட இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இராணுவத்தினரால் நடப்பட்டிருந்த பெயர் பலகை அகற்றப்பட்டுவன திணைக்களத்தின் புதிதாக பெயர் பலகை இடப்பட்ட நிலையில் போராட்டக்காரர்களால் நேற்று அந்த பெயர்ப்பலகையும் உடைத்தெறியப்பட்டுள்ளதுடன் அங்கு நடப்பட்ட மரக்கன்றுகளும் பிடுங்கியெறியப்பட்டன.

மாவீரர்துயிலும் இல்லத்தை அபகரிப்பதற்கு எதிராகப் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் மாவீரர்துயிலும் இல்லத்தை மக்களிடம் வழங்க கோரியும், இராணுத்தினரை பிரதேசத்தில் இருந்து வெளியேறுமாறும் கோஷங்கள் எழுப் பப்பட்டன.




# அரச தொழில் முயற்சியாண்மை நிறுவனங்களை மீள்கட்டமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு!

## அரசாங்கம் தீர்மானம்

அரச தொழில் முயற்சியாண்மை நிறுவனங்களை மீள்கட்டமைப்பதற்கான யோசனை 2022 ஆம் ஆண்டுக்கான இடைக்கால மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, தற்போது அரச தொழில் முயற்சியாண்மைகளின் மீள்கட்டமைப்புக்கான செயன்முறைக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் அரச தொழில் முயற்சிகள் மீள்கட்டமைப்பு அலகொன்று நிறுவப்பட்டுள்ளது.

மீள்கட்டமைப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் நிறுவனங்களில் ஒருசில அரச நிறுவனங்களாவதுடன், அவ்வாறான ஒருசில கம்பனிகளில் பெரும்பான்மைப் பங்குகள் அரசக்குச் சொந்தமாகவுள்ளன. அத்துடன் ஒருசில அரச தொழில் முயற்சிகள் கூட்டுத்தாபனங்களாக இயங்குகின்றன. இந்நிலைமையின் கீழ் அரச தொழில் முயற்சிகளை மீள்கட்டமைக்கும் வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் 100 வீதமான பங்குகளின் உரித்து திறைசேரியின் செயலாளருக்கு கிடைக்கும் வகையில் திறைசேரியில் இணைப்புச் செய்யப்பட்ட தாய்க் கம்பனியை நிறுவுவதற்கும், மீள்கட்டமைப்பதற்காக அடையாளங் காணப்படுகின்ற அரச தொழில் முயற்சியாண்மைகளை குறித்த தாய்க்கம்பனியுடன் இணைப்புச் செய்யப்பட்ட கம்பனியாக பதிவு செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை தயாரிப்பதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இந்தியாவுக்கு தப்பித்த கஞ்சிப்பானை இம்ரானின் பிணையாளர்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை!



கஞ்சிப்பானை இம்ரான் இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அவரது பிணையாளர்களை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கஞ்சிப்பானை இம்ரானுக்காக அவரது சகோதரரும் வேறொருவரும் பிணையாளர்களாகவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொலை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கஞ்சிப்பானை இம்ரான், வெளிநாட்டுப் பயணத் தடை உள்ளிட்ட நிபந்தனைகளுடன் 50 லட்சம் ரூபா சரீரப் பிணையில் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தினால் கடந்த 20 ஆம் திகதி விடுவிக்கப்பட்டார்.

பிணையில் விடுவிக்கப்பட்டு 5 நாள்களின் பின்னர் கஞ்சிப்பானை இம்ரான் தமிழ்நாடு – இராமேஸ்வரம் ஊடாக இந்தியாவிற்கு பிரவேசித்துள்ளார் என இந்திய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய ஒவ்வொரு மாத இறுதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாக வேண்டும் என கஞ்சிப்பானை இம்ரானுக்கு உத்த ரவிடப்பட்டிருந்தது.

எனினும், அவர் அவ்வாறு முன்னிலையாகாத நிலையில் அது தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இதற்கமைய, கஞ்சிப்பானை இம்ரானின் சகோதரரையும் மற்றைய பிணையாளரையும் எதிர்வரும் மார்ச் மாதம் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தவணையின் போது நீதிமன்றத்தில் முன்னிலையாக் குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 2023 ஆம் ஆண்டு புத்தாண்டில் ஆசிவேண்டி நாடாளுமன்ற வளாகத்தில் போதி பூஜை!



2023 புத்தாண்டில் ஆசி வேண்டி நாடாளுமன்ற வளாகத்திலுள்ள ஜய மஹாபோதிக்கு அருகில் விசேடபோதி பூஜை நிகழ்வு நேற்று (புதன்கிழமை) முற்பகல் இடம்பெற்றது.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற இந்த பூஜையை கொழும்பு, களுத்துறை பகுதிகளின் தலைமை தேரரும், கோட்டே சுனேத் ராராமாதிபதியுமான வணக்கத்துக்குரிய அலிக்கே வெல சீலானந்த தேரர் நடத்தினார்.

நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற பணியாட்தொகுதி பிரதானியுமான குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக, நாடாளுமன்ற திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற செயலகத்தின் பணியாளர்கள் மற்றும் இணைந்த சேவைகளின் பணியாளர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்றபணியாட்களின்பௌத்த சங்கத்தினரால் இந்த ஆசீர்வாத போதி பூஜை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இதன் நோக்கத்தை தெளிவுபடுத்தும் வகையில் வரவேற்புரையை அதன் தலைவர் ஷாந்த வீரரத்ன நிகழ்த்தினார்.



# முதலாவது வேதாகமப் பாடசாலை கிழக்கிலங்கையில் ஆரம்பித்துவைப்பு!



கிழக்கிலங்கையில் முதலாவது வேதாகம பாடசாலை ஒன்று கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தால் உத்தியோக பூர்வமாக நேற்று (புதன்கிழமை) மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் வைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் களுவாஞ்சிகுடி கிளைத்தலைவர் அங்குச சர்மா குருக்கள் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தொடக்க நிகழ்வில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் லோகநாதக் குருக்கள், உள்ளிட்ட பல சிரேஷ்ட குருமார்கள், சிவாச்சாரியார்கள், கலந்து கொண்டனர்.

ஆரம்பத்தில் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாருக்கு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மாணாக்கர்களுக்கு பிரதம குருமார்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் லோகநாதக் குருக்கள் வேதாக பாடலை ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட இரு குருமாருக்கான நியமனக் கடிதங் களை வழங்கி வைத்தார்.

பின்னர் இதன்போது நியனம் பெற்ற இரு குருமார் உத்தியோக பூர்வமாக வேதாகக் கல்வியை இதன்போது ஆரம்தித்து வைத்தனர். இந்தப் பாடசாலை தினமும் குறிப்பிட்ட நேரத்திற்கு களுவாஞ்சிகுடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் எனும் என இதன் போது அறிவிப்பட்டது.

கிழக்கிலங்கையில் தாம் பல்வேறு வேலைத்திட்டங்களைச் செய்து வருவதாகவும். கிழக்கில் இந்து சமய நெறி முறைகளை சீரமைத்து கட்டுக்கோப்புக்குள் கொண்டு வருவதற்காகவும், இளம் குருமாரை முறையாகப் பயிற்றுவிப்பற்காக வேண்டி கிழக்கில் இந்த முதலாவது வேதாகம பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இதன்போது கலந்துகொண்ட பிரதம குருமார் தெரிவித்தனர்.

# இத்தாலியத் தம்பதியினர்கள் பயணித்த காரை தாக்கி கவிழ்த்த காட்டுயானை

## ரந்தெனிகலவில் சம்பவம்

இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டிருந்த இத்தாலிய தம்பதியினரை ஏற்றிச்சென்ற காரை, காட்டு யானை ஒன்று தாக்கிய சம்பவம் இடம் பெற்றுள்ளது. ரந்தெனிகல பினிகல பகுதியில் வைத்து அவர்கள் பயணித்த காரை காட்டுயானை இவ்வாறு தாக்கி கவிழ்த்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு யானை தாக்கியதில் கார் சேதமடைந்துள்ளதாகவும், ஆனால் அதில் பயணித்த இத்தாலிய தம்பதியினருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் அந்தப் பகுதியின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.01.2023இல் வெளியிடப்பெற்றது.